இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 06.06.2026

# தானே மண் அள்ளிப் போட்டுக் கொண்ட ராகுல்!

**“தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்குப் பின், காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழைத்த துரோகத்தினால் மிகுந்த மனக்காயமுற்றிருக்கும் கழகத் தோழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில், வருகின்ற ஜூன் 8ஆம் தேதி டெல்லியில் நடைபெறும் ‘இந்தியா’ கூட்டணிக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்காது” என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவை திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துள்ளது.**

**இத்தகைய முடிவை தி.மு.க. எடுக்க வேண்டிய சூழலை உருவாக்கியது காங்கிரஸ் கட்சியே ஆகும். அதிலும் குறிப்பாக, ராகுலின் தன்னிச்சையான, ஆணவமான நடவடிக்கைகளே இதற்குக் காரணம்! தி.மு.க. கூட்டணியில் இருந்துகொண்டே இதற்கு குழிபறிக்கும் செயல்களை ராகுல் செய்தார். அதைப் பச்சையாக வெளிப்படையாகவே செய்தார். இதைச் சகித்துக் கொள்ளும் தேவை தி.மு.க.வுக்கு இல்லை.**

**தனது தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக் கொண்டுள்ளார் ராகுல். காங்கிரஸ் கட்சியை ஆழக் குழி தோண்டி ஒவ்வொரு மாநிலத்திலும் புதைக்கும் செயலை அவர் செய்து வருகிறார். இதுதான் மற்ற மாநிலங்களிலும் நடந்தது தமிழ்நாட்டில் நடக்கிறது. தான் பிரதமர் ஆவதை விட, பிரவீன் சக்கரவர்த்தியை எம்.பி. ஆக்குவதற்காகத்தான் ராகுல் அலைந்திருக்கிறார். இப்படி ஒரு கெட்ட மதியாளரைத் தூக்கிச் சுமந்தோமே என்ற வருத்தமே மிஞ்சுகிறது.**

2018 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் சிலை திறப்பு விழாவில் சோனியா, ராகுலை மேடையில் வைத்துக் கொண்டே “பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை முன்மொழிகிறேன்” என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். இத்தகைய தலைவர் மு.க.ஸ்டாலினை அவமானப்படுத்துவதைத் தான், நம்பிக்கைத் துரோகம் என்று தெரியாமல் செய்து வந்துள்ளார் ராகுல்.

ஸ்வீட் பாக்ஸ் வாங்கித் தந்து, ‘நீங்கள்தான் என் சகோதரர்’ என்று சொன்னார் ராகுல். ‘நான் யாரையும் சகோதரர் என்று சொன்னதில்லை’ என்றார் ராகுல். இது வெறும் நடிப்புதான் போலும். தன்னை பிரதமர் வேட்பாளராக முன்மொழிவார் என்பதற்காகச் செய்யப்பட்ட நாடகமாகவே கருத வேண்டி உள்ளது.

**ஒரு முறை நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடியைக் கடுமையாகப் பேசிவிட்டு, பிரதமர் இருக்கைக்கு வந்து அவரைக் கட்டிப் பிடித்தார் ராகுல். அப்படி கட்டிப் பிடித்துக் கொண்டே நாடாளுமன்றத்தைப் பார்த்து கண் அடிக்கவும் செய்தார் ராகுல். அவரது இரட்டை வேடத்தை அம்பலப்படுத்திய காட்சி அது. அந்த இரட்டை வேடத்தைத் தான் எல்லா மாநிலங்களிலும் நடத்திக் காட்டி வருகிறார் ராகுல்.**

பீகாரில் தேஜஸ்வீயை முதுகில் குத்திய காட்சியை யாரும் மறக்க முடியாது. தேஜஸ்வீக்கு இருந்த மக்கள் செல்வாக்கை கபளீகரம் செய்வதற்காக அவர்களோடு கூட்டணி போட்டார் ராகுல். தேர்தல் நெருங்கி வரும் போது பிரச்சாரமும் சரியாகச் செய்யாமல் வெளிநாடு போனார் ராகுல். தேர்தலுக்குப் பத்து நாட்கள் இருக்கும் போதுதான் தேஜஸ்வீயை முதலமைச்சர் வேட்பாளராக காங்கிரஸ் கட்சி ஒப்புக் கொண்டது. அதை அறிவிக்கவும் ராகுல் வரவில்லை. இறுதியாக பீகாரில் தோல்வியைத் தழுவியது இக்கூட்டணி. இதற்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டியவர் ராகுல்தான். இப்படித்தான் **ஒவ்வொரு மாநிலத்திலும் அணைத்துக் கெடுக்கும் செயலை ராகுல் செய்து வருகிறார். அதையே தான் தமிழ்நாட்டிலும் செய்தார் ராகுல்.**

2019 நாடாளுமன்றத் தேர்தலில் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக காங்கிரஸ் கட்சி முன்மொழிவதற்கு முன்னதாகவே அவர் பெயரை முன்மொழிந்தவர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அத்தகைய தலைவர் மு.க.ஸ்டாலின்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆக வேண்டும் என்பதற்காக உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் ராகுல் பேசினாரா என்றால் இல்லை. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சேர்ந்து ஒரு கூட்டம் பேசாமல் அடம்பிடித்தார், ஆணவமாக நடந்து கொண்டார் ராகுல்.

புதுச்சேரியில் திருபுவனை, மங்களம், காலாப்பட்டு, ராஜ்பவன், உழவர் கரை, காரைக்கால் ஆகிய தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களை எதிர்த்து காங்கிரஸ் கட்சியே போட்டியிட்டது. இத்தகைய போட்டி வேட்பாளர்கள், ராகுலைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். அதாவது, தி.மு.க. வேட்பாளர்கள் வென்று விடக் கூடாது என்பதற்காக ராகுலே போட்டி வேட்பாளர்களை நிறுத்தி இருக்கிறார் என்றுதானே இதற்குப் பொருள்?

ஒரு மாநிலங்களவை இடத்தையும் 28 சட்டமன்றத் தொகுதிகளையும் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி பெற்றது. கூட்டணிக் கட்சித் தொண்டர்களின் உழைப்பால் பெற்ற வெற்றியைப் பணயம் வைத்து மாற்று அணிக்கு மூன்று நாட்களுக்குள் காங்கிரஸ் கட்சி மாறியது.

**இவர்கள் புதிதாக ஒருவரோடு சேர்ந்துள்ளார்களே.. அந்த விஜய், காங்கிரஸ் கட்சியைப் பற்றி என்ன சொன்னார்? ‘சில பல கோடிகளைக் கொடுத்து தமிழ்நாடு காங்கிரஸை, ஸ்டாலின் தனது பைக்குள் போட்டுக்கிட்டார்’ என்று பேசினார். இன்று சில பல கோடிகள் கொடுத்துத்தான் காங்கிரஸ் ஆதரவைப் பெற்றாரா விஜய்? காங்கிரஸ் கட்சி எவ்வளவு பெற்றது? அதில் ராகுல் எவ்வளவு பெற்றார்? ஒரு ராஜ்யசபா உறுப்பினர் பதவி மட்டும்தான் காங்கிரஸுக்கு தரப்பட்ட விலையா? அவ்வளவுதானா?**

தேர்தலுக்கு முன்னதாக தி.மு.க.விடம் ஒரு ராஜ்ய சபா. தேர்தலுக்குப் பின்னதாக த.வெ.க.விடம் ஒரு ராஜ்ய சபா. இப்போது ஏதோ ராஜ்யத்தையே பிடித்துவிட்டதாக மகிழ்ச்சியில் இருக்கிறது காங்கிரஸ். ‘இந்தியா’ கூட்டணியை இழந்து, ஒரு ராஜ்ய சபா இடத்தைப் பெற்றுள்ளது காங்கிரஸ். கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கி இருக்கிறது காங்கிரஸ்.

இவ்வளவுக்குப் பிறகும், ‘இந்தியா கூட்டணியில் தி.மு.க. இருக்கிறது’ என்று சொல்வதற்கு காங்கிரஸ் மேலிடப் பார்வையாளர் கிரீஷ் ஜோடங்கருக்கு வெட்கமாக இல்லையா?

**மான ஈனத்தைப் பற்றிக் கவலைப்படாத கட்சியாக காங்கிரஸ் இருக்கலாம். கழகத்தை உயிர்ப்போடு வைத்திருப்பதே இனமானமும், தன்மானமும் தான்.**

**சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களை மனதில் வைத்து தி.மு.க. முடிவுகள் எடுப்பது இல்லை. இனமானம், தன்மானத்தை மனதில் வைத்தே முடிவுகளை எப்போதும் எடுக்கும்.**

## தி.மு.க. மாநில தொழிலாளர் அணிச் செயலாளர்

# பிடிசி ஜி.செல்வராஜ் இல்ல திருமண வரவேற்பு விழா!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, ஜூன் 6-

தி.மு.க. மாநில தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அவர்களின் பேரனும் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளருமான எஸ்.ஆர்.ரவி - திருமதி ஆர்.கீதா ஆகியோரின் மகனுமான ஆர்.ஜி.அபிஷேக்கிற்கும் - சென்னை சூளை, டிஆர்எஸ். சசிகுமார் - திருமதி எஸ்.புஷ்பராணி தம்பதியரின் அன்புமகளுமான எஸ்.கீர்த்தனாவிற்கும் திருமணம் நாளை (7.6.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 7.30 மணியளவில் சென்னை 115, ஈசிஆர், நீலாங்கரை, மகாத்மா காந்தி நகர், எண்.4/11ல் உள்ள ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில் நடைபெறுகிறது.

முன்னதாக திருமணத்தின் வரவேற்பு விழா இன்று (6.6.2026 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் மற்றும் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி., இளைஞர் அணிச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., ஆகியோர் தலைமையில் - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் வரவேற்புரையில் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, எம்.எல்.ஏ., திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிர மணியன், அரியலூர் மாவட்டச் செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் எம்.எல்.ஏ, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், ஆதிதிராவிடர் நலக்குழு மாநிலச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இத்திருமண வரவேற்பில் தலைமைக் கழக நிர்வாகிகள் - முன்னாள் அமைச்சர் பெருமக்கள் - மாவட்டக் கழகச் செயலாளர்கள் - இந்நாள், முன்னாள் பாராளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் - கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் - மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள் - அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் - கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் உள்ள நிர்வாகிகள், தொழிற்சங்க நிர்வாகிகள் - பிரதிநிதிகள் மற்றும் தி.மு.க. தொழிலாளர் அணியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் - கழக முன்னணியினர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

# த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு ‘மெட்ரோ ரயில்’ பணிகள் தாமதம்!

## பொதுமக்கள் அதிருப்தி!

*சென்னை, ஜூன் 6 -*

*த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பின் பூந்தமல்லி - வடபழனி இடையே ரயில் சேவையை தொடங்குவதில் கால தாமதம் ஆவதால் பொதுமக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.*

*சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் மதிப்பில், 116 கிலோ மீட்டர் தொலைவில் 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது.*

*அதன்படி, மாதவரம் சிறுசேரி வரை 3வது வழித்தடத்திலும், கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வரை 4வது வழித்தடத்திலும், மாதவரம் சோழிங்கநல்லூர் வரை 5வது வழித்தடத்திலும் பணிகள் நடைபெறுகின்றன. மொத்தம்118 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்க திட்டமிட்டு, பணிகள் நடைபெறுகின்றன. கடந்த திமுக ஆட்சியில் மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் வேகமாக நடைபெற்று வந்தன.*

*ஆனால், த.வெ.க ஆட்சி அமைந்த பிறகு மெட்ரோ ரயில் திட்டங்கள் ஆமை வேத்தில் நடைபெறுகிறது. தேர்தலுக்காக வடமாநிலங்களுக்கு சென்றவர்கள் குறைந்த அளவே பணிக்கு திரும்பியதால் விறுவிறுப்புடன் நடைபெற்று வந்த மெட்ரோ பணியில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.*

*இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் ஒட்டுமொத்தமாக, ஏப்ரல் வரை 52 சதவீதம் மெட்ரோ பாதை அமைக்கும் பணிகள் மட்டுமே நிறைவடைந்துள்ளதால் குறிப்பிட்ட காலத்தில் மெட்ரோ ரயில் சேவையை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.*

*இதேபோன்று, பூந்தமல்லி -போரூர்- வடபழனி தடத்தில் பணிகள் நிறைவடைந்து 5 மாதங்கள் ஆகியும் ரயில்சேவை தொடங்காததால் பயணிகள் சிரமம் அடைந்துள்ளனர்.*

## ‘ஜி ராம் ஜி’ திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு

# ரூ.12,698 கோடி வழங்கப்பட்ட நிலையில், தற்போது ரூ.3,923 கோடி மட்டுமே ஒதுக்கீடு!

## தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு – அக்கறை காட்டாத த.வெ.க. அரசு!

சென்னை, ஜூன் 6 –

ஜி ராம் ஜி திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடு மாற்றியமைக்கப்பட்டதால் தமிழகத்திற்கு வெறும் ரூ.3,923 கோடி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளன. ஆனால், உத்தரபிரதேசம் மற்றும் குஜராத் போன்ற பாஜ ஆளும் மாநிலங்களில் நிதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் தென் மாநிலங்களை ஒன்றிய அரசு ஓரம் கட்டி இருப்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளன. ஆனால் தவெக அரசு இதுகுறித்து கருத்து தெரிவிக்காமல் அமைதியாக இருப்பது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் என்று அழைக்கப்பட்டும், பொதுமக்களிடம் பரவலாக நூறு நாள் வேலை வாய்ப்புத்திட்டம் என அறியப்பட்டு வந்ததின் பெயரையும் அதன் பழைய கட்டமைப்புகளையும் மாற்றி நாடாளுமன்றத்தில் ‘ஜி ராம் ஜி’ திட்டம் என்ற ஒரு வரைவு சட்டம் பா.ஜ. அரசு கொண்டு வந்து இரு அவைகளின் ஒப்புதலுடன் நிறைவேற்றின.

இதனை பல மாநிலங்களில் ஆளும் கட்சியினர் எதிர்த்தனர். குறிப்பாக, தமிழக முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின் ஜன.23ம் தேதி சட்டப்பேரவையில் இத்திட்டத்தினை எதிர்த்து தனி தீர்மானத்தை நிறைவேற்றினார். இது அனைத்து கட்சிகளின் ஆதரவோடு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாட்டைப் போலவே பஞ்சாப், தெலங்கானா போன்ற மாநிலங்களும் இப்புதிய சட்டத்திற்கு எதிராக தங்களின் சட்டமன்றங்களில் தீர்மானங்களை நிறைவேற்றின.

சுருக்கமாக கூறினால், தமிழ்நாட்டின் கிராமப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், மாநிலத்தின் நிதி உரிமையை நிலைநாட்டவும் ஒன்றிய அரசுக்கு எதிராக தன் வலுவான சட்டப்பூர்வ எதிர்ப்பைச் சட்டமன்றத்தின் வாயிலாக மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பதிவு செய்தன. தற்போது இந்த ஜி ராம் ஜி சட்டம் இந்தியாவின் கூட்டாட்சி தத்துவத்திற்கு கடுமையான சவாலாக உருவெடுத்துள்ளது.

அந்தவகையில் 16வது நிதி ஆணைய பரிந்துரையின் படி மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடு திருத்தி அமைக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் மாநிலங்களுக்கு தற்போது அனுப்பிய வரைவு அறிக்கை அண்மையில் அனுப்பி வைத்துள்ளது. அதில் ஜி ராம் ஜி திட்டத்தில் ஒன்றிய அரசு ஒதுக்கும் ஒட்டுமொத்த நிதி ரூ.95,692 கோடியில் தமிழகத்திற்கு வெறும் ரூ.3,926 கோடி மட்டும் கிடைக்க உள்ளன.

கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக ஒன்றிய அரசு வழங்கும் ஒட்டுமொத்த நிதியில், தமிழ்நாடு இதுவரை 10 சதவீத பங்கைப் பெற்று முன்னணியில் இருந்தது. ஆனால், புதிய கணக்கீட்டு முறையின்படி, தமிழ்நாட்டின் பங்கு 4.10 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. முந்தைய காலங்களில் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் எதிர்கால நிதி உரிமை, ஒரேயடியாக பாதிக்கும் கீழ் சரிந்துள்ளதை இந்த தரவுகள் காட்டுகின்றன.

இதுமட்டுமின்றி, ஜிராம்ஜி திட்டத்தின் கீழ் ஆந்திராவுக்கு 8.8 சதவீதம் வழங்கப்பட்ட நிலையில் 4.20 சதவீதமும், கேரளாவுக்கு 3.94 சதவீதம் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2.38 சதவீதமும், தெலங்கானாவுக்கு 3.94 சதவீதம் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2.17 சதவீதமும் குறைப்பட்டுள்ளது. இதனால் தென் மாநிலங்கள் ஓரங்கட்டப்பட்டு இருப்பது வெட்டவெளிச்சமாகி உள்ளன.

ஆனால் பா.ஜ. ஆளக்கூடிய உத்தரபிரதேசத்திற்கு ஒதுக்கப்படும் நிதி 9.67 சதவீதத்தில் இருந்து 17.62 சதவீதமும், பீகாருக்கான நிதி 6.10 சதவீதத்தில் இருந்து 9.95 சதவீதமும், மராட்டிய மாநிலத்திற்கு நிதி 3.99 சதவீதத்திலிருந்து 6.44 சதவீதமும், குஜராத்துக்கு அளிக்கப்படும் நிதி 1.49 சதவீதத்தில் இருந்து 3.76 சதவீதமும் உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், இந்த மாற்றியமைக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ஜூலை 1ம் தேதி முதல் அமலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே, மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கான நிலுவை தொகையான ரூ.4,034 கோடியை (கூலி மற்றும் பொருட்கள் பங்கு) ஒன்றிய அரசு நீண்ட நாட்களாக தமிழ்நாட்டிற்கு வழங்காமல் இழுத்தடித்தபோது திமுக சார்பில் மாநிலம் தழுவிய பிரமாண்ட போராட்டங்கள் நடத்தப்பட்டன. கல்வி நிதியை சமக்ர சிக்ஷா அபியான் முடக்குவது, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதியை தராமல் தாமதிப்பது மற்றும் வரிப் பகிர்வில் தமிழ்நாட்டிற்கு தகுந்த பங்களிக்காமல் புறக்கணிப்பது என பல்வேறு தளங்களில் ஒன்றிய அரசு காட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மையை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்கள் மத்தியில் வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

### 12 வருடத்தில் ரூ.87 ஆயிரம் கோடி நிதி

கடந்த 2014 முதல் 2026 வரையிலான காலக்கட்டத்தில் இந்த ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடமிருந்து ஒட்டு மொத்தமாக ரூ.87,639 கோடியை பெற்றுள்ளது. நாட்டின் மொத்த நிதியில் 10 சதவீதம் பங்கினை தமிழ்நாடு மட்டுமே பெற்று வந்த நிலையில், தற்போதைய புதிய சட்ட மாற்றங்கள் இந்த நிதிப் பகிர்வை பாதியாகக் குறைத்துள்ளன. கடந்த காலங்களை பொறுத்தவரை 2023 24 நிதியாண்டில் ரூ.12,698 கோடி, 202425 நிதியாண்டில் ரூ.10,156 கோடி, 202526 நிதியாண்டில் ரூ.5,878 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த விஷயத்தில் தமிழ்நாடு முதல்வர் விஜய் உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்துவாரா அல்லது போராட்டங்களை முன்னெடுப்பாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆனால் தமிழ்நாடு அரசு அமைதியாக இருப்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# 2 நாட்களாக இருளில் மூழ்கிய குமரி - திருவள்ளுவர் சிலை!

## மின் கேபிள் பழுதால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம்!

கன்னியாகுமரி கடலின் நடுவே அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மின்சாரம் கடலுக்கடியில் அமைக்கப்பட்டுள்ள கேபிள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இந்த கேபிள் சில மாதங்களுக்கு முன்பு பழுதடைந்த நிலையில் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டிருந்தது.




இந்நிலையில், இரண்டு நாட்களுக்கு முன்பு மீண்டும் கேபிளில் ஏற்பட்ட பழுதால் திருவள்ளுவர் சிலைக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டு, சிலை முழுவதும் இருளில் மூழ்கியுள்ளது.

மேலும், கண்ணாடி பாலத்தில் தினமும் இரவு 7 மணி முதல் 8 மணி வரை ஒளிரும் அலங்கார மின் விளக்குகளும் கடந்த இரண்டு நாட்களாக எரியாமல் உள்ளன. இதனால் கன்னியாகுமரிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

திருவள்ளுவர் சிலைக்கு மின்சாரம் வழங்கும் கேபிளை உடனடியாகவும் நிரந்தரமாகவும் சீரமைக்க சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுலா ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.